## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)

## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்

**26 பிப்ரவரி 2016 / 17 ஜமாதியுல் அவ்வல் 1437**

## <u>நமக்கு வழங்கப்பட்டுள்ள அருட்கொடைகளை பொறுப்புணர்வுடன் பயன்படுத்துதல்</u>

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْرًا وَنَذِيْرًا
وَدَاعِيًا إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجًا مُنِيْرًا وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
وَصَفِيُّ اللَّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது ”தக்வா” எனும் பக்தியை அதிகரித்துக் கொள்வோமாக! நமக்கு வழங்கப்பட்டுள்ள அருட்கொடைகளை அல்லாஹ்வை வணங்கி வழிபடவும், அல்லாஹ் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து நாம் தவிர்ந்து கொள்ளவும் பயன்படுத்துவோமாக! அவ்வாறு செய்தால், அல்லாஹ்

நம்மீதும், நமது குடும்பத்தார் மீதும் தனது அன்பு மழையைப் பொழிவான். இன்ஷாஅல்லாஹ்.

கடந்த சில வாரங்களாக, நன்றி செலுத்துபவர்களாக இருப்பதன் சிறப்பைப் பற்றி நினைவூட்டப்பட்டது. நன்றி செலுத்துவதானது, நமக்கு ஆற்றலையும் சகிப்புத்தன்மை மற்றும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் வழங்குவதாகும். நன்றி செலுத்துவதானது, அனைத்து ”நிஃமத்” (அருட்கொடை) களை நமக்கு வழங்கி அருள் புரியும் அல்லாஹ்வை நாம் மறக்காமல் இருப்பதையும் உறுதி செய்கிறது.

நன்றி செலுத்தும் தன்மை மிகவும் முக்கியமானதாகும். அத்தன்மையை தன்னில் ஏற்படுத்துமாறு இறைத்தூதர் சுலைமான் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் வேண்டிக் கொண்டார்கள். அல்லாஹ் திருக்குர்ஆனின் ”அந்-நம்ல்” எனும் அத்தியாயத்தின் 19-வது வசனத்தில் கூறுகின்றான்:

فَتَبَسَّمَ ضَاحِكًا مِّن قَوْلِهَا وَقَالَ رَبِّ أَوْزِعْنِيٓ أَنْ أَشْكُرَ نِعْمَتَكَ
ٱلَّتِيٓ أَنْعَمْتَ عَلَيَّ وَعَلَىٰ وَٰلِدَيَّ وَأَنْ أَعْمَلَ صَٰلِحًا تَرْضَىٰهُ وَأَدْخِلْنِي
بِرَحْمَتِكَ فِي عِبَادِكَ ٱلصَّٰلِحِينَ ١٩

பொருள்: அப்போது அதன் சொல்லைக் கேட்டு, அவர் புன்னகை கொண்டு சிரித்தார். இன்னும், “என் இறைவா! நீ என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்துள்ள உன் அருட்கொடைகளுக்காக, நான் நன்றி செலுத்தவும், நீ பொருந்திக் கொள்ளும் விதத்தில் நான் நன்மைகள் செய்யவும், எனக்கு அருள் செய்வாயாக! இன்னும் உன் கிருபையைக் கொண்டு என்னை உன்னுடைய நல்லடியார்களில் சேர்த்தருள்வாயாக!” என்று பிரார்த்தித்தார்.

இறைத்தூதர் சுலைமான் (அலை) அவர்கள் மேற்கண்டவாறு செய்துள்ள துஆ (பிரார்த்தனை) மிகவும் சிறப்பானதாகும். நாம் எப்போதும் ஓத வேண்டிய ”துஆ” ஆகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு அருளியுள்ள அருட்கொடைகளை நாம் புறக்கணிக்கக் கூடாது என்பதையும் இந்த ”துஆ” நமக்கு நினைவூட்டுவதாக உள்ளது.

ஜமாஅத்தார்களே! நாம் இதற்கு முன்பு விவாதித்தது போல், நமக்கு அருளப்பட்டுள்ள அருட்கொடைகளை, வெகுமதிகளை நாம் பயன்படுத்தி வரும் காலமெல்லாம், தொடர்ந்து அல்லாஹ்வுக்குப் பணிவிடை செய்பவர்களாகவும், அவனுக்கே அடிபணிந்து, நம்மை அவன் பக்கமாக நெருக்கமாக்கிக் கொள்பவர்களாகவும் நாம் இருப்பது தான் உண்மையான நன்றி செலுத்துதல் ஆகும். மேலும், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடமிருந்து நாம் அடையும் அனைத்து அருட்கொடைகளும் மேற்கொண்டு பக்திமிக்க முஸ்லிம்களாகவும், மேற்கொண்டு அதிக நற்காரியங்களைச் செய்பவர்களாகவும், மற்றவர்களுக்கு உதவி செய்பவர்களாகவும் நாம் ஆகுவதற்கு, நம்மை ஆர்வமூட்டுபவையாக இருக்க வேண்டுமெனவும் மேற்கண்ட துஆ நமக்கு நினைவூட்டுகிறது. நமக்கு வழங்கப்பட்டுள்ள அருட்கொடைகளை நாம் வீணாக்காமல் இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டுமெனவும் நமக்கு நினைவூட்டுகிறது.

எனவே, இன்று, இங்கு ஒன்று கூடியுள்ள ஒவ்வொரு தனிநபரிடமும், அல்லாஹ் நமக்கு அருளியுள்ள அருட்கொடைகளில் எத்தனை அருட்கொடைகளை, நாம் நற்காரியங்கள் செய்வதற்காகப் பயன்படுத்தியுள்ளோம்? எத்தனை அருட்கொடைகளை நாம்

வீணாக்கியுள்ளோம்? என நம்மை நாம் கேட்டு, சிந்தித்துப் பார்க்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் ஒரு ஹதீதின் மூலம் நமக்குப் பின்வருமாறு நினைவூட்டியுள்ளார்கள்:
"ஐந்து விஷயங்கள் நடைபெறுவதற்கு முன்பு ஐந்து விஷயங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். முதுமையை அடைவதற்கு முன்பாக இளமையையும், நோய் வருவதற்கு முன்பாக நலமாக இருப்பதையும், வறுமை வருவதற்கு முன்பாக செழிப்பாக இருப்பதையும், அலுவல்மிக்கவர்களாக ஆகுவதற்கு முன்பாக ஓய்வாக இருப்பதையும், மரணம் வருவதற்கு முன்பாக உயிரோடு இருப்பதையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் ஹாகிம் ரஹ், இமாம் பைஹகீ ரஹ்)

ஜமாஅத்தார்களே! நாம் நமது வயதையும் வாழ்நாளையும் எவ்வாறெல்லாம் வீணாக்கியுள்ளோம் என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். நாளை நாம் அல்லாஹ்வைச் சந்திக்கும் போது அவனிடம் காண்பிக்க நம்மிடம் என்ன உள்ளது? நாம் ஏதாவது நற்காரியங்களைச் செய்துள்ளோமா? நாம் நமது வயதையும் காலத்தையும் இப்பூமியில் எவ்வாறு பயன்படுத்தினோம் என அல்லாஹ் நம்மிடம் கேட்டால் நாம் அல்லாஹ்வுக்கு எவ்வாறு பதில் சொல்லும் நிலையில் உள்ளோம்? நாம் நமது செல்வத்தை அல்லாஹ்வின் பாதையில் செலவழித்துள்ளோமா? நமக்கு அல்லாஹ் வழங்கிய கல்வியறிவை நற்காரியங்களைச் செய்ய பயன்படுத்தினோமா? என்றெல்லாம் நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

ஜமாஅத்தார்களே! மேற்கண்ட கேள்விகளால் நம்மை நாம் அடிக்கடி கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் உலக இன்பங்களின் அலைகளில் அடித்துச் செல்லப்படாமலிருக்க இது மிகவும் அவசியமாகும்.

உதாரணமாக, நாம் நலமாகவும், உறுதியாகவும் ஆற்றல்மிக்கவர்களாகவும் இருக்கும் போது, நமது உணவையோ, நமது ஆரோக்கியமான வாழ்க்கை முறையையோ பற்றிக் கவலை கொள்ள வேண்டிய அவசியமில்லை என நாம் நினைக்கலாம். நாம் செல்வச் செழிப்புடன் இருக்கும் போது, தேவைப்படுவோருக்கு உதவி செய்வதைப் பொருட்படுத்தாமல் செலவு செய்பவர்களாகவும், வருங்காலத்துக்காக செல்வத்தைச் சேகரிக்காதவர்களாகவும் இருக்கலாம். அல்லது நாம் இளமையாக இருக்கும் காலத்தில், முதுமையை அடையும் போது வணக்க வழிபாடுகளில் ஈடுபடலாம் என நினைத்து இளமைக் காலத்தை வீணாகவும், பார்ட்டிகளிலும் கழிக்க முற்படலாம்.

எனினும், நமது நேரம் இவ்வுலகில் எவ்வாறு எண்ணப்பட்டு வருகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்! நமக்கு வழங்கப்பட்டுள்ள அருட்கொடைகள் நிரந்தரமானவையல்ல. நமக்கு எப்போது மரணம் வரும் என்பதை நாம் அறிவோமா? நாம் நாளையும் நலமாக இருப்போம்; இன்று போல் நமது வணக்க வழிபாடுகளை நாளையும் நம்மால் நிறைவேற்ற முடியும் என்பதை அறிவோமா? இவ்வுலக வாழ்க்கை ஆச்சரியங்களால் நிறைந்ததாகும். உதாரணமாக, தற்போதைய பொருளாதார நிலை நிச்சயமற்றதாக உள்ளது. எனவே, நாம் கவனமாகவும் அறிவுப்பூர்வமாகவும் செலவழிப்பது அவசியமாகும். நாம் பணி நீக்கம் செய்யப்படுவோமானால், அது நம்மைப் பாதிக்குமானால் நமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள

அதிகம் சேமித்து வைப்பது அவசியமாக உள்ளது. உண்மையில், நாம் தேவையுள்ளவர்களுக்குக் கொடுத்து உதவினால் நாம் மேற்கொண்டு அல்லாஹ்வினால் அருள்கள் வழங்கப்படலாம்.

அல்லாஹ்வினால் நமக்கு வழங்கப்படும் அருட்கொடைகளை நேர்மையாகவும் பொறுப்புணர்வோடும் நாம் பயன்படுத்துவதும் நன்றி செலுத்தும் முறைகளில் ஒன்றாகும். நமக்கு வழங்கப்பட்டுள்ள அருட்கொடைகளின் அருமையை நமக்கு உணர்த்தும் "முஸீபத்" (பேரழிவு) நம்மை அடையும் வரை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.
நமது வாழ்க்கை, கணக்கிடுதல், திட்டமிடுதல், நமது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளுதல் போன்றவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க இன்னும் தாமதிக்கக் கூடாது. நமக்கு அருளப்பட்டுள்ள ஒவ்வொரு "நி்ஃமத்" (அருட்கொடையை) - அது வயது, செல்வம், குடும்பம், இயல்பான நிலை, உடல் நலம், நமது நாட்டில் காணப்படும் அமைதி போன்ற எதுவாக இருப்பினும்- நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு இவ்வாறு சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும்.

யா அல்லாஹ்! அதிகம் வழங்குபவனே! அதிகம் பிரியம் கொள்பவனே! நாங்கள் எங்கள் கரங்களை உன் பக்கம் உயர்த்துகிறோம்; உனக்கே அடிபணிகிறோம்; உனக்கு நன்றி செலுத்தும் ஆற்றலை எங்களுக்கு வழங்குமாறு மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். உனது அருட்கொடைகளை வீணாக்காதவர்களில் நின்றும் எங்களை ஆக்குவாயாக! நீ எங்களுக்கு வழங்கியுள்ள அருட்கொடைகளை, நற்காரியங்கள் செய்வதற்காகப் பயன்படுத்தும் ஆற்றலை நாங்கள் பெறுவதற்காக, உனக்கு நன்றி செலுத்தும் உணர்வை எங்களின் உள்ளங்களில் ஏற்படுத்துவாயாக!

யா அல்லாஹ்! ஆற்றல், சகிப்புத்தன்மை மற்றும் அமைதியின் பக்கம் அழைத்துச் செல்கின்ற, நன்றி செலுத்தும் உணர்வை எங்களுக்கு நீ வழங்கி அருள் புரிவாயாக! நாங்கள் நன்றி செலுத்துபவர்களாக இருப்பதன் மூலம் அமைதி, சாந்தி, சமாதானத்தை எங்களுக்கு வழங்கி அருள் புரிவாயாக! நன்றி செலுத்துபவர்களாக இருப்பதன் மூலம் எங்கள் குடும்பத்தார்களை மகிழ்ச்சியானவர்களாக ஆக்குவாயாக! எங்கள் நாட்டுக்கு அமைதியையும் ”பரக்கத்” (அபிவிருத்தி மற்றும் வளத்தை) ஏற்படுத்துவாயாக!

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.